தினமணி

"விவசாயிகளுக்கு 90 சத மானியத்தில் பண்ணைக் குட்டைகள்'

First Published : 05 May 2011 12:02:23 PM IST

கரூர், மே 4: கரூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் விவசாயிகளுக்கு 90 சத மானியத்தில் பண்ணைக் குட்டைகள் அமைத்துத் தரப்படும் என்றார் கரூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கே. ஜெகதீசன்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் புதன்கிழமை கூறியது:

கரூர் மாவட்டத்தில் தற்போது கோடை மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் 10 ஏக்கரில் கரும்பு, 300 ஏக்கரில் பயறு வகைகள், 290 ஏக்கரில் நிலக்கடலை, ஆயிரம் ஏக்கரில் மா, 450 ஏக்கரில் சப்போட்டா, 220 ஏக்கரில் மரவள்ளிக்கிழங்கு, 100 ஏக்கரில் கொய்யா பயிரிடப்பட்டுள்ளது.

இந்தப் பயிர்களுக்கு தற்போது பெய்துள்ள கோடை மழை மிகவும் பயனுள்ளதாகும். கோடை மழையை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள, மானாவாரியில் கோடை உழவு மேற்கொள்ள வேண்டும். மேலும், மண் மாதிரிகளை எடுத்து நிலத்தின் வளத்தைத் தெரிந்துகொண்டு, அதற்கேற்ப உரமிட்டு விளைச்சலைப் பெருக்க முன் வர வேண்டும்.

கரூர் மாவட்டத்தில் தற்போது விவசாயிகளை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களான மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் முகமையின் கீழ் வேளாண்மைத் துறை பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இதில், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் 20 கிராமங்களில் செயல்படுத்தப்படுகிறது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டங்களின் கீழ் க. பரமத்தி வட்டத்தில் 9 கிராமங்களிலும், அரவக்குறிச்சி வட்டத்தில் 9 கிராமங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் தோகைமலை வட்டத்தில் 15 கிராமங்களிலும், க.பரமத்தி வட்டத்தில் 6 கிராமங்களிலும், அரவக்குறிச்சி வட்டத்தில் 6 கிராமங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

இத் திட்டத்தின் கீழ், பெய்யக்கூடிய மழையை சேமித்து வைக்கும்விதமாக மண் வரப்புகள் அமைத்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், நிலத்தை சமப்படுத்துதல் ஆகிய பணிகள் 90 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன.

மேலும் இத் திட்டத்தின் கீழ் 36 ஆயிரம் பழ மரக் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. நவப்ரா திட்டத்தின் கீழ் 15 கிராமங்களுக்கு 17 ஆயிரம் மரக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத் திட்டங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க முன்வரும் விவசாயிகளுக்கு 90 சத மானியம் வழங்கப்படவுள்ளது. இதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தோகைமலை வட்டத்தில் நுழைவுத் திட்டமாக வடசேரி, சின்னரெட்டிபட்டி, தெலுங்கப்பட்டி, பில்லூர், புழுதேரி, க.பரமத்தி வட்டத்தில் வைரமடை, தேவனம்பாளையம், ஆகிய கிராமங்களில் தலா ரூ. 80 ஆயிரத்தில் ஆழ்குழாய்களும், பள்ளிக்கு சுற்றுச்சுவர், கதிரடிக்கும் களம் போன்றவையும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) பூ. மதனகோபால் உடனிருந்தார்.

**மா, கொய்யாவில் மாவுப் பூச்சித் தாக்குதலா?**

First Published : 05 May 2011 09:46:28 AM IST

வேலூர்: வேலூர் மாவட்டத்தில் மா, கொய்யா, பப்பாளி உள்ளிட்ட 58 வகையான தாவரங்களில் இப்போது காணப்படும் மாவுப்பூச்சித் தாக்குதலை பூச்சிகொல்லி மருந்துகளை தெளித்து கட்டுப்படுத்தலாம் என தோட்டக்கலை துணை இயக்குநர் ச. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வேலூர் மாவட்டத்தில், ஆலங்காயம், பேர்ணாம்பட்டு, ஒடுக்கத்தூர், அணைக்கட்டு, மாதனூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மா, கொய்யா மரங்கள், பப்பாளி, ரோஜாச் செடிகள், செம்பருத்தி, செவ்வரளி உள்ளிட்ட 58 வகையான தாவரங்களில் மாவுப் பூச்சி தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

இதை உடனடியாக கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் இமிடாகுளோபிரிட் 2 மில்லி லிட்டரும், அசாடிராக்டின் என்ற வேம்பு கலந்த பூச்சிக்கொல்லியை 0.03 சதவீதமும் கலந்து தெளிக்க வேண்டும்.

ஒரு வாரம் இடைவெளி விட்டு ஒரு லிட்டர் தண்ணீரில் பிரொஃபினோபாஸ் பூச்சி மருந்தை 0.03 சதவீதம் அசாடிராக்டினுடன் கலந்து தெளிக்க வேண்டும்.

இம்முறையை கையாண்டால் மாவுப் பூச்சி தாக்குதலில் இருந்து பயிர்களை காப்பாற்ற முடியும் என அவர் தெரிவித்தார்.

**பறவைக்கண் நோய்**

மாவட்டத்தில் சுமார் 16 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் அல்போன்சா, பங்கனப்பள்ளி, ஹிமாம்பசந்த், செந்தூரா, ருமானி, பெங்களூரா போன்ற மா மரவகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

இப்போதைய சூழலில் சில இடங்களில் மாமரங்களில் கரிப்பூட்டை நோய் மற்றும் பறவைக்கண் நோய் காணப்படுகிறது. இந்நோய் தாக்குதலுக்குள்ளான மரங்களின் இலைகள், தண்டுப் பகுதிகளில் கரும் படலங்கள் மற்றும் கருமை நிறப்புள்ளிகள் காணப்படும். பழம் முழுமையாக கருமைநிறமாகிவிடும்.

இதைக் கட்டுப்படுத்த 2 சதவீதம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் இயற்கை உயிரியல் பூஞ்சானக் கொல்லியை வேறு ஒரு பூச்சி அல்லது பூஞ்சானக் கொல்லியுடன் கலக்காமல், 7 நாள்களுக்கு ஒரு முறை 3 தடவை தெளிக்க வேண்டும்.

ஒரு சதவீதம் ஸ்டார்ச் கலவையை தெளித்தும் கரும்படல நோயை கட்டுப்படுத்தலாம். விரிவான விவரங்களுக்கு அருகில் உள்ள தோட்டக்கலைத் துறை அலுவலர்களை அணுகலாம்.

**விதை உற்பத்தியாளர்கள் கவனத்துக்கு..**

First Published : 05 May 2011 09:46:56 AM IST

செய்யாறு, மே 4: சான்று விதைகள் உற்பத்திச் செய்யும் அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் விதைப்பண்ணை சான்று திட்டத்தில் பதிவு செய்துகொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து திருவண்ணாமலை விதைச்சான்று உதவி இயக்குநர் எஸ்.பேபி பர்வதம் புதன்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய தரமான, ஆதாரம் மற்றும் சான்று நிலை விதைகளை உற்பத்தி செய்வது அவசியம். அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் விதைப்பண்ணை அமைத்து சான்று திட்டத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

நெல், சிறு தானியங்கள், பயறு வகைப் பயிர்கள், எண்ணெய்வித்துகள் ஆகிய பயிர்களின் விதைப்பண்ணை அமைக்க விதைப்பு அறிக்கை படிவத்தில் உரிய விவரங்களை 3 நகல்களில் பூர்த்தி செய்து, விதை ஆதாரத்துக்கான அட்டை மற்றும் விதை வாங்கியதற்கான விற்பனை ரசீது ஆகியவற்றை இணைத்து உரிய சான்று கட்டணங்களுடன் விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

கட்டண விவரங்கள்:

நெல் மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கு ஏக்கருக்கு வயலாய்வுக் கட்டணம் ரூ.60, உற்பத்தியாளர் பதிவுக்கட்டணம் ரூ.25, விதை பரிசோதனைக் கட்டணம் ரூ.30 என மொத்தம் ரூ.115 செலுத்த வேண்டும்.

பயறு மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு ஏக்கருக்கு வயலாய்வுக் கட்டணம் ரூ.50, உற்பத்தியாளர் பதிவுக்கட்டணம் ரூ.25, விதை பரிசோதனைக் கட்டணம் ரூ.30 என மொத்தம் ரூ.105 செலுத்தப்பட வேண்டும்.

விதைச்சான்று திட்டத்தில் விதைப்பண்ணை அமைப்பற்கு தேவையான விவரங்களை தெரிந்துகொள்ள தங்கள் பகுதியில் உள்ள விதைச்சான்று அலுவலர்களை தொடர்புகொள்ளலாம்.

மேலும் விவரங்கள் அறிந்துக் கொள்ள "விதைச்சான்று உதவி இயக்குநர், எண்.19, காந்தி நகர், 6-வது தெரு, திருவண்ணாமலை' என்ற முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

**இன்று அசோலா சாகுபடி பயிற்சி தொடக்கம்**

First Published : 05 May 2011 11:26:08 AM IST

நாமக்கல், மே 4: அசோலா சாகுபடி முறைகள் குறித்த 2 நாள் பயிற்சி முகாம் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வியாழக்கிழமை தொடங்குகிறது.

இதுகுறித்து திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்ட அறிக்கை:

அசோலா சாகுபடி முறைகள் குறித்து வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்கள் காலை 9 முதல் மாலை 5 வரை பயிற்சி அளிக்கப்படும்.

இதில் அசோலா ரகங்கள், உற்பத்தி முறைகள், வளரிடம், அசோலாவில் உள்ள சத்துக்கள், கால்நடை மற்றும் கோழிகளுக்கு தீவனமாக அளிக்கும் முறைகள் மற்றும் அதன் செயல் விளக்கம் குறித்த பயிற்சி அளிக்கப்படும்.

÷கோடை விடுமுறையில் உள்ள 8 முதல் 12 வகுப்பு வரையிலான மாணவ, மாணவியர் கலந்து கொள்ளலாம்.

பயிற்சியின் பாது காலை மற்றும் மாலை தேநீர், மதிய உணவு வழங்கப்படும். பயிற்சி கட்டணமாக ரூ.100 செலுத்த வேண்டும்.

**சிறு, குறு விவசாயிகளுக்கு வாழ்வளிக்கும் விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்**

பா.சுஜித்குமார்

First Published : 05 May 2011 09:47:36 AM IST

திருவண்ணாமலை: தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெற இயலாமல் இருந்த சிறு, குறு விவசாயிகள், குத்தகை நிலங்களில் பயிரிடுவோர், கோயில் நிலங்களில் பயிரிடுவோர், பயிர்க்கடன் மற்றும் இதர கடன்களை பெற்று பயன் பெரும் வகையிலும், அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் வகையிலும் விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் திட்டம் முதன்முதலாக தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு குழுவிலும் குறைந்தது 10 விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர வேண்டும். இதன் கீழ் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் எளிதாக கடன் பெறலாம். குழு உறுப்பினர்களுக்கு புதிய வேளாண் தொழில்நுட்பங்களை பயிற்றுவிக்கலாம்.

விவசாயிகள் தாங்கள் விளைபொருள்களை இணைந்து விற்கலாம். ஒவ்வொரு குழுவும் கூட்டுச் சேமிப்பு கணக்கை தொடங்குவதால் உறுப்பினர்களிடையே சேமிக்கும் பழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது. விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு ரூ.10 ஆயிரம் வீதம் சுழல்நிதி மானியமாக அரசு வழங்குகிறது. குழுக்களுக்கு தரப்படும் கடன்களுக்கு சொத்து ஆதாரங்கள் எதுவும் கோரப்படுவதில்லை. மேலும் விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் சொட்டுநீர் பாசனக் கடன், நடவு இயந்திரம், டிராக்டர், நவீன தெளிப்பான், பவர் டில்லர் போன்ற நவீன விவசாயக் கருவிகளையும் வாங்கலாம்.

நில மேம்பாடு, நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த நீண்ட காலக் கடன், மத்திய காலக் கடன் வசதிகளை எளிதில் பெற்று கூட்டுறவு முறையில் சாகுபடி செய்து முன்னேறலாம்.

கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் இரு வாரங்களுக்கு ஒருமுறை கூடி விவசாயம் சார்ந்த கருத்துகளை கலந்துரையாடி அதை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். தமிழகத்தில் மட்டும் இதுவரை 18,980 விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் தொடங்கப்பட்டு ரூ.275 கோடி கடனுதவி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருவண்ணாமலை மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் ச.சுப்பிரமணியன் கூறியது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் ஆண்டுக்கு 500 குழுக்கள் தொடங்க திட்டமிடப்பட்டு 3 ஆண்டுகளில் 1,500 குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஏராளமான சிறு, குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர். நடப்பாண்டு மட்டும் 158 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூ.50 லட்சம் வரை கடனுதவி தரப்பட்டுள்ளது என்றார்.

தினமலர்

# உணவுப்பொருள் பணவீக்கம் 8.53 சதவீதமாக குறைவு

மே 06,2011,00:08



புதுடில்லி: நாட்டின் உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம், ஏப்ரல் 23ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 8.53 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில், 8.76 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது.கடந்த ஆண்டின் இதே வாரத்தில், நாட்டின் உணவு பொருள் பணவீக்கம், 20.91 சதவீதமாக மிகவும் அதிகரித்திருந்தது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், ஆண்டுக்கணக்கில், அரிசி விலை 2.08 சதவீதமும், உணவு தானியங்கள் விலை 4.42 சதவீதமும் அதிகரித்திருந்தது.

இதே வாரத்தில், ஆண்டுக் கணக்கில், மொத்த விலை அடிப்படையில் பருப்பு வகைகளின் விலை 7.39 சதவீதம் அளவிற்கு குறைந்திருந்தது.சென்ற செவ்வாய்கிழமையன்று, பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக, ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை உயர்த்தியது. இந்நிலையில், உணவு பொருள் பணவீக்கம் குறைந்திருப்பது, மத்திய அரசுக்கும், ரிசர்வ் வங்கி எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கும் ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

**பயிர்க்கடன் வழங்குவது அடியோடு நிறுத்தம்: விவசாயிகள் பாதிப்பு**

மே 06,2011,00:07



சேலம்: சட்டசபை தேர்தல் விதிமுறைகளை காரணம் காட்டி, பயிர்க்கடன் வழங்குவது அடியோடு நிறுத்தப்பட்டுள்ளதால், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில், 23 மத்திய கூட்டுறவு வங்கிகளின் கட்டுப்பாட்டில், 4,522 தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. இந்த வங்கிகள் மூலம், விவசாயிகளுக்கு பயிர்க்கடன், விவசாய நகைக்கடன், தானிய ஈட்டுக்கடன் வழங்கப்படுகிறது. தவிர, மகளிர் சிறு வணிகக்கடன், வாகன கடன், வீட்டு அடமான கடன், கூட்டு பொறுப்புக்குழு கடன் என, 20 வகையான கடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

கடந்த 2006ல், விவசாயக்கடன் மற்றும் வட்டித்தொகை, 3.796 கோடி ரூபாய்தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், 9 சதவீதமாக இருந்த விவசாய கடன் வட்டி, 7 சதவீதமாக குறைக்கப்பட்டது. இதையடுத்து, தவணை தவறாமல் திரும்பச் செலுத்தும் கடனுக்கு, 2 சதவீத வட்டி குறைப்பு என, விவசாயிகளுக்கு அடுத்தடுத்து சலுகைகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில், விவசாயிகளுக்கு வட்டியில்லா ஓராண்டு குறுகிய கால கடன் திட்டம், 2009 ஏப்ரல் 1ம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டது. ஒரு விவசாயிக்கு குறைந்தது, 10 ஆயிரம் முதல் அதிக பட்சம், ஒரு லட்ச ரூபாய் வரை, கடனுதவி மற்றும் தேவையான உரம் வழங்கப்பட்டது.அதேபோல, வட்டியில்லா விவசாய நகைக்கடன், கூட்டு பொறுப்புக்குழு கடன் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. இதன் காரணமாக, சென்ற பிப்ரவரி மாதம் 15ம் தேதி முடிய, விவசாய கடன், 2,453.40 கோடி ரூபாயாக அதிகரித்தது.மார்ச் மாதம் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு, நன்னடத்தை விதிகளும் அமலானது. அதனால், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டது.ஓட்டுப்பதிவு முடிந்த பிறகும், தேர்தல் நடத்தை விதிகளை காரணம் காட்டி, தொடக்க வேளாண் வங்கிகளில், விவசாயிகளுக்கு கடன்

வழங்க மறுக்கப்பட்டு வருகிறது. வட்டியில்லா கடன் பெற்ற விவசாயிகளில், 90 சதவீதம் பேர், தவணை தவறாமல் கடனை திரும்ப செலுத்தி விட்டனர். மீண்டும் கடன் வழங்க தேர்வு செய்து, நான்கு மாதமாகியும் இதுவரை கடன் தராமல் இழுத்தடிப்பு செய்வதாக விவசாயிகள் புலம்புகின்றனர்.தற்போது, பெய்த கோடை மழை மக்காசோளம், ராகி, சோளம் உள்ளிட்ட மானாவரி பயிர்கள், துவரை, உளுந்து உள்ளிட்ட ஊடுபயிர்கள் செய்ய ஏதுவாக உள்ளது.

தவிர, மஞ்சள் பயிரிடவும் ஏற்ற தருணமாக உள்ளது. தொடக்க வேளாண் வங்கிகள் கடன் தர மறுப்பதால், விவசாயிகள் செய்வதறியாமல் திகைத்துள்ளனர்.

இயற்கை கை கொடுத்தும், போதிய முதலீடு இல்லாமல் விவசாயப் பணிகள் முடங்கி விட்டதாக, விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.தொடக்க வேளாண் வங்கி அதிகாரி ஒருவர் கூறுகையில், 'மத்திய கூட்டுறவு வங்கி கடன் தர மறுப்பதால், விவசாயிகளுக்கு கடன் வழங்குவது, நான்கு மாதமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கூடுதல் பதிவாளரை கேட்டால், 'தேர்தல் முடிவுக்குப் பின் பார்த்துக் கொள்ளலாம்' என்கிறார். எனவே, விவசாயிகளுக்கு கடன் வழங்க முடியாத நிலையில், தொடக்க வேளாண் வங்கிகள் செயலிழந்துள்ளன' என்றார்.

**எண்ணெய்களின் தாய்**

பதிவு செய்த நாள் : மே 06,2011,00:00 IST

ஓர் இடத்தில் அபரிமிதமாக விளையும் வித்துக் களில் இருந்து தான், எண்ணெய் பெறப்படும். ஐரோப்பிய நாடுகளில், சூரியகாந்தி விளைச்சல் அதிகம் என்பதால், அங்கு சூரியகாந்தி எண்ணெய் பரவலானது. அது இந்தியாவில் பரவலாகி, பாரம்பரிய எண்ணெய் வகைகள் தீங்கு விளைவிப்பவை என்ற மாயத்தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. சூரியகாந்தி எண்ணெய்யால் பாதிக்கப்பட்ட இந்திய எண்ணெய்யில் ஒன்று வெர்ஜின் கோக்கனட் எண்ணெய்யாகும். வேதியியல் முறைகளைப் பயன் படுத்தாமல், புத்தம் புதிய தேங்காய்களை இயற்கை முறையில் பிழிந்து இயல்நிலைத் தேங்காய் எண்ணெய் தயாரிக்கப்படுகின்றன. இதில் வைட்டமின்கள், தாது உப்புகள், ஆன்ட்டி ஆக்சிடன்டுகள் ஏராளமாக உள்ளன. எனவே இதனை எண்ணெய்களின் தாய் என்பர். இந்த எண்ணெய்யில் வைட்டமின் ஈ, லாரிக் அமிலம் உள்ளன.

**நெல் கொள்முதல் மையம் துவக்கம் : கி.கிரி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மே 06,2011,01:46 IST

கிருஷ்ணகிரி: விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று காவேரிப்பட்டணத்தில் வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் மாவட்ட நிர்வாகம் நெல் கொள் முதல் மையம் அமைத்து நேற்று முதல் நெல் கொள் முதலை துவக்கியுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 20,000 ஹெக்டேருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

குறிப்பாக கே.ஆர்.பி., அணை பாசன பகுதிகளான திம்மாபுரம், பெரியமுத்தூர், அவதானப்பட்டி, மலையாண்டஹள்ளி, கால்வேஅள்ளி, பெண்ணேஸ்வரமடம், காவேரிப்பட்டணம், வேலம்பட்டி, தளிஅள்ளி ஆகிய சுற்றுவட்டார பகுதியில் 10,000 ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கே.ஆர்.பி., அணையில் போதிய நீர் இருப்பால் இந்த பகுதியில் மூன்று போகமும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

இவ்வாறு சாகுபடி செய்யும் நெல்லை வியாபாரிகளிடம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டிய நிலை விவசாயிகளுக்கு இருந்து வந்தது. வியாபாரிகள் சின்டிகேட் அமைத்து விலையை குறைத்து நிர்ணயம் செய்து விடுதால் விவசாயிகளுக்கு நஷ்டமே மிஞ்சி வந்தது.

நெல் அறுவடையின்போது 75 கிலோ கொண்ட பச்சை நெல் ஒரு மூட்டை 450 ரூபாயில் இருந்து 500 ரூபாய் வரைக்கு மட்டுமே வியாபாரிகள் நெல்லை வாங்கியுள்ளனர். அதாவது ஒரு கிலோ நெல் 5 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அறுவடை செய்யும் நெல்லை வியாபாரிகளுக்கு மட்டுமே விற்பனை செய்ய முடியும் என்ற நிலையில் வியாபாரிகள் நிர்ணயம் செய்யும் விலைக்கே விவசாயிகள் விற்பனை செய்து வந்தனர்.

ஆனால், டெல்டா மாவட்டங்களில் அரசு நெல் கொள்முதல் மையங்களில் விவசாயிகள் விற்பனை செய்யும் ஒரு கிலோ நெல்லுக்கு 11 ரூபாய் அரசு வழங்குகிறது. இது போல் கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் நெல் கொள்முதல் அமைத்து விவசாயிகளிடம் இருந்து அரசு நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை ஏற்ற மாவட்ட நிர்வாகம் காவேரிப்பட்டணத்தில் உள்ள வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முதல் நெல் கொள்முதல் மையத்தை துவங்கியது. நெல் கொள்முதல் மைய துவக்க விழாவில் வேளாண் விற்பனை துறை அதிகாரிகள், தமிழக

விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ராமகவுண்டர் மற்றும் வேல், பெருமா, ராஜா, குணசேகரன், நசீர் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நேற்று மட்டும் 3 டன் நெல் விவசாயிகளிடம் இருந்து கொள் முதல் செய்யப்பட்டு நெல்லுக்குண்டான விலையை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்கப்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து காவேரிப்பட்டணத்தை சேர்ந்த விவசாயி வேல் கூறியது: கே.ஆர்.பி., அணை நீரை கொண்டு நான்கு ஏக்கரில் நெல் சாகுபடி செய்து வருகிறோம். அறுவடை நேரத்தில் சின்டிகேட் அமைத்து வியாபாரிகள் நெல்லை விலைக்கு வாங்குவதால் அவர்கள் நிர்ணயிக்கும் விலைக்கே விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. இந்த ஆண்டு ஒரு கிலோ பச்சை நெல் 5 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டது. நெல்லை வாங்கி செல்லும் வியாபாரிகள் சுமார் ஆறு மாதம் கழித்துதான் பணத்தை கொடுப்பார்கள். காவேரிப்பட்டணத்தில் நெல் கொள்முதல் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தோம்.

இதனை தொடர்ந்து காவேரிப்பட்டணத்தில் நெல் கொள்முதல் மையம் அமைக்கப்பட்டு தற்போது ஒரு கிலோ நெல் 11 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 17 சதவீதம் ஈரப்பதரம் உள்ள நெல்லுக்கு இந்த விலை கிடைப்பதால் வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுவதை விட ஒரு மூட்டை நெல்லுக்கு 250 ரூபாயில் இருந்து 300 ரூபாய் வரை கூடுதலாக கிடைக்கிறது. விற்பனை செய்யப்படும் நெல்லுக்குண்டான விலை உடனடியாக கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**தக்காளியை ஏலம் எடுக்க வியாபாரிகள் போட்டி**

பதிவு செய்த நாள் : மே 06,2011,02:29 IST

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டில் தக்காளி வரத்து குறைந்துள்ள நிலையில், வெளியூர் விவசாயிகள் கொண்டு வந்த தக்காளியை கேரளா வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு ஏலத்தில் எடுத்ததால், விலை கணிசமாக உயர்ந்தது.கிணத்துக்கடவு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தக்காளி சாகுபடி கடந்த மாசி மாதத்தில் இருந்தே நிறுத்தப்பட்டுள்ளது. கிணற்று பாசனம் உள்ள விவசாயிகள் மட்டுமே தக்காளி சாகுபடி செய்துள்ளனர்.

இந்நிலத்தில் இருந்து தினமும் ஐந்து கூடை தக்காளிகள் மட்டுமே கிடைக்கிறது.தக்காளி வரத்து குறைந்துள்ள நிலையில், தக்காளிக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால், கேரளா வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு ஏலத்தில் எடுக்கின்றனர். இதனால், தக்காளி விலை உயர்ந்து வருகிறது. இதனை அறிந்த சிறுக்களந்தை, பெதப்பம்பட்டி போன்ற பகுதிகளில் இருந்து விவசாயிகள்

கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டிற்கு தினமும் டெம்போ மூலம் தக்காளி கொண்டு வருகின்றனர். இங்கு நடக்கும் ஏலத்தில், வெளியூர் தக்காளிகள் ஏலம் விடப்படுகிறது.

இதில், நேற்று 15 கிலோ எடையுள்ள தக்காளி நிறைந்த பெட்டி ரூ.120க்கு ஏலம் சென்றது. இதே தக்காளி பெட்டி உடுமலை மார்க்கெட்டில் ரூ.80க்கு செல்வதால், அங்கு செல்லும் விவசாயிகள் தற்போது, கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டிற்கு வந்துள்ளனர்.

**கொடைக்கானல் ஆப்பிள் பிஞ்சிலேயே கருகுகிறது**

பதிவு செய்த நாள் : மே 05,2011,21:52 IST

கொடைக்கானல் : கொடைக்கானலில் ஆப்பிள் மரங்களில் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதால், விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. கொடைக்கானல் சுற்றுப்புற கிராமங்களில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது.ஒவ்வொரு சீசனுக்கும் ஏற்ற வகையில் பழங்கள் விளையும். அடுத்த மாதம் முதல் ஆப்பிள் சீசன் காலமாகும். அதிக பராமரிப்பு செலவு, நீண்ட நாட்களுக்கு பிறகு மகசூல் கிடைக்கும் என்பதால், குறைந்தளவிலேயே பயிரிடப்படுகிறது. தற்போது, ஆப்பிள் பழங்கள் "சைஸ்' பெரிதாகும் நேரத்தில், நோய் தாக்குதலால் பிஞ்சிலேயே கருகுகிறது.

விவசாயிகள் கூறுகையில்," கொடைக்கானலில் விளையும் ஆப்பிள்களுக்கு தற்போதே ஆர்டர்கள் குவிந்துள்ளது.இந்நிலையில், மாறி வரும் பருவ நிலையால், நோய் தாக்கி, கருகி போதிய வளர்ச்சி பெறுவதற்கு முன்பே, கீழே விழுந்து விடுகிறது.இதை சரி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்,' என்றனர். தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறுகையில்," காய்கள் பெருக்கும் கால கட்டத்தில், ஒரே மாதிரியான காலநிலை இருந்தால் மட்டுமே வளர்ச்சி பெறும். அழுகிய ஆப்பிள்களின் மாதிரி எடுத்து சோதனைக்கு அனுப்பியுள்ளோம்,' என்றார்.

*உணவு பொருள் பணவீக்கம் 8.53 சதவீதமாக குறைந்தது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*பருப்பு வகைகள் விலை குறைவால், ஏப்ரல் 23–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள் பணவீக்கம் 8.53 சதவீதமாக குறைந்துள்ளது. இது, முந்தைய வாரத்தில் 8.76 சதவீதமாகவும். கடந்த 2010–ஆம் ஆண்டின் இதே வாரத்தில் இது 20.91 சதவீதமாகவும் இருந்தது.*

*விலைவாசி உயர்வு மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் ஒரு சவாலாக இருந்து வருகிறது. பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், ரிசர்வ் வங்கி அண்மையில் தாக்கல் செய்த கடன் கொள்கை ஆய்வு அறிக்கையில் ரெப்போ ரேட் விகிதங்களை 0.50 சதவீதம் உயர்த்தியது. இது, பங்கு வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், உணவு பொருள் பணவீக்கம் சற்று குறைந்து வருவது ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது.*

*பருப்பு வகைகள்*

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள் விலை ஓர் ஆண்டு கால அடிப்படையில் 7.39 சதவீதம் குறைந்துள்ளது.

அதேசமயம், இதர உணவு பொருள்கள் விலை அதிகமாக உள்ளது. அரிசி, கோதுமை விலை முறையே 2.08 சதவீதம் மற்றும் 0.06 சதவீதம் உயர்ந்ததையடுத்து, உணவு தானியங்கள் விலை 4.42 சதவீதம் அதிகரித்துள்ளது. வெங்காயம் விலை 16.09 சதவீதமும், உருளைக்கிழங்கு விலை 0.27 சதவீதமும் உயர்ந்துள்ளது. ஒட்டுமொத்தத்தில் காய்கறிகள் விலை 3.44 சதவீதம் அதிகரித்துள்ளது.

பழங்கள் விலை 32.69 சதவீதம் உயர்ந்துள்ளது. இதற்கு தனிநபர் செலவிடும் வருவாய் அதிகரித்து வருவதும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. பால் விலை 5.16 சதவீதமும், முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 5.13 சதவீதமும் அதிகரித்துள்ளது.

உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 27.84 சதவீதமாகவும், எரிபொருள் பணவீக்கம் 13.53 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.

இந்நிலையில், நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்), கோதுமை மற்றும் பருப்பு வகைகள் உற்பத்தி மிகவும் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, வரும் மாதங்களில் உணவு பணவீக்கம் குறைய வாய்ப்புள்ளது.

ஆய்வு அறிக்கை

மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் சென்ற மார்ச் மாதத்தில் 8.98 சதவீதமாக உயர்ந்து இருந்தது. இதனை கட்டுப்படுத்தும் வகையில், ரிசர்வ் வங்கி முக்கிய கடன் வட்டி விகிதங்களை உயர்த்தியது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஆறு மாதங்கள் பொது பணவீக்கம் 9 சதவீதமாக இருக்கும் என்றும், நிதி ஆண்டு இறுதிக்குள் 6 சதவீதமாக குறையும் என்றும் ரிசர்வ் வங்கி ஆய்வு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தினகரன்

**தக்காளி விலை ஒரு கிலோ ரூ.10**

பதிவு செய்த நாள் 5/6/2011 1:28:23 AM



தேன்கனிக்கோட்டை : மழையால் செடியிலேயே பழங்கள் அழுகத் தொடங்கியதால், தேன்கனிக்கோட்டையில் ஒரு கிலோ தக்காளி விலை ஸ10 ஆக விற்பனையானது. கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அதிக அளவில் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் விளையும் தக்காளி, ஓசூர், ராயக்கோட்டை தக்காளி மார்க்கெட்டுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த சில வாரங்களுக்கு முன் தக்காளி விளைச்சல் அதிகமாக இருந்தது. அப்போது ஒரு கிலோ தக்காளி ரூ.1க்கு விற்பனையானது. இதனால் விரக்தியடைந்த விவசாயிகள் பலர், தக்காளி பழங்களை சாலையோரம் கொட்டினர். சிலர் தோட்டத்தை அழித்து விட்டு மாற்றுப்பயிருக்கு மாறினர்.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக தேன்கனிக்கோட்டை பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. சில நாட்கள் ஆலங்கட்டி மழையும் பெய்தது. இதனால் செடியிலேயே தக்காளி பழங்கள் அழுகியுள்ளன. உற்பத்தி குறைவால் தக்காளி விலையும் உயரத் தொடங்கியுள்ளது. தற்போது ஒரு கிலோ தக்காளி ரூ.8 முதல் ரூ.10 வரை விற்பனையாகிறது. தக்காளி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.